உமா பதிப்பகம்
UMA PUBLICATIONS

27 July 2018



## சிந்தனையாளர்களின் கருத்துகள்: முனைவர் சு. குமரன்

**சுயசரிதை**

**பெயர்:** இணைப்பேராசிரியர் முனைவர் சு.குமரன்
**பிறந்த இடம்:** கெடா மாநிலம் (சுங்கை புந்தார் தோட்டம், பீடோங்)
**பிறந்த தேதி:** 8 ஆகஸ்ட் 1959

**கல்வி**

ஆரம்பக் கல்வி: பீடோங், சுங்கை புந்தார் தோட்டத் தமிழப் பள்ளி.
இடைநிலைக் கல்வி: பீடோங் இடைநிலைப்பள்ளி, சுங்கை பட்டாணி கீர் ஜொஹாரி இடைநிலைப்பள்ளி.
உயர்நிலைக் கல்வி: மக்தாப் அடாபி, புக்கிட் மெர்தாஜாம் பினாங்கு.
பட்டக்கல்வி: இளங்கலை, முதுகலை, முனைவர் பட்டப்படிப்பு - மலாயாப் பல்கலைக்கழகம், கோலாலம்பூர்.
பட்டையக் கல்வி: ஆசிரியர் பயிற்சி - மலாயாப் பல்கலைக்கழகம், கோலாலம்பூர்.

**தொழில்**

1986 - 1989: துணை விரிவுரையாளர், இந்திய ஆய்வியல் துறை, மலாயாப் பல்கலைக்கழகம். 1991 - 1999: விரிவுரையாளர். 2000 முதல்: இணைப்பேராசிரியர், இந்திய ஆய்வியல் துறை, மலாயாப் பல்கலைக்கழகம். கடந்த 32 ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார். 2006 - 2013 வரையில் இவர் மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையின் தலைவராகப் பொறுப்பேற்றார்.

**விருது**

11.7.2013 இல் உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு "**தமிழ் வானம்பாடி**" என்ற விருதினை வழங்கி பெருமைபடுத்தியது.

**சாதனைகள்**

எப்பொழுதும் தடைகளைக் கடந்து மனம் சோர்ந்திடாமல் தொடர்ந்து பணியாற்ற வேண்டும் என்பது இவரது கோட்பாடாகும். இதுவரையில் 18 முனைவர் (டாக்டர்) பட்டதாரிகளையும் 22 முது நிலைப் பட்டதாரிகளையும் உருவாக்கியுள்ளார். பல்துறை சார்ந்த 100-க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை (தமிழ், ஆங்கிலம், மலாய்) உள்நாட்டு, அனைத்துலகக் கருத்தரங்குகளிலும் மாநாடுகளிலும் படைத்துள்ளார்.

**கருத்துகள்**

**மாணவர்கள்**

மாணவர்கள் முதலில் தங்களைத் தாங்களே வெல்லும் திறனைப் பெற்றிருத்தல் வேண்டும். தங்களிடத்திலுள்ள பலவீனங்களைக்

கண்டறிந்து அவற்றைக்களையும் வழிமுறைகளை அறிந்து கொள்ளவேண்டும் என்று அவர் வலியுறுத்துகிறார்.

**ஆசிரியர்கள்**

ஆசிரியர்கள் கற்றல்-கற்பித்தல் மூலம் தங்களால் இயன்ற அளவு மாணவர்களின் அடைவு நிலையை உயர்த்துகின்றனர். மாணவர்களின் மனவோட்டம், கற்றல் திறன் ஆகியவற்றை முன்னிருத்தி கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைகளை ஆசிரியர்கள் மேற்கொள்ளும் போது மாணவர்களின் வளர்ச்சியைக் காண்பது திண்ணம் என்கிறார்.

**பெற்றோர்கள்**

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் சிறுசிறு வெற்றிகளையும் முன்னேற்றத்தையும் மகிழ்ச்சியோடு வரவேற்று பெற்றோர்களின் உழைப்பையும் தியாகத்தையும் பிள்ளைகளுக்கு உணர்த்த வேண்டும்.